(8) அறிவிப்புகள்

1978 ஆம் ஆண்டு சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல்-கழிவு நீர் அகற்றல் சட்ட முன்வடிவு

மாண்புமிகு பேரவைத் தலைவர்; பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1978 ஆம் ஆண்டு, சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல்-கழிவுநீர் அகற்றல் சட்ட முன்வடிவை (சட்ட மன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண் 11/78) பேரவையில் ஆய்வுக்கு எடுத்துக் கொள்வதற்கு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

(7) அரசினர் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி

(ஆ) 1978-ஆம் ஆண்டு, சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல்-கழிவு நீர் அகற்றல் சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 11/78)

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்; தலைவரவர்களே, 1978 ஆம் ஆண்டு சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல்-கழிவுநீர் அகற்றல் சட்ட முன்வடிவ*(சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 11/78) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டுமென்று நான் முன்மொழிகிறேன்.

தலைவர் அவர்களே, 1978 ஆம் ஆண்டு சென்னைப் பெருநகர்ப் பகுதி குடிநீர் வழங்கல்-கழிவு நீரகற்றும் சட்டமுன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 11/1978) பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டுமென்று நான் முன் மொழிந் திருக்கிறேன். சென்னை மாநகரம் மற்றும் சென்னைப் பெருநகர்ப் பகுதிக்குள் வரும் புறநகர்ப் பகுதிகள் ஆகியவற்றின் குடிநீர் வழங்கும் பணியையும், சாக்கடை நீர் அகற்றும் பணியையும் சென்னை மாநகராட்சியும் சம்பந்தப்பட்ட உள்ளாட்சி மன்றமும் கவனித்து வருகின்றன. ஐக்கிய நாடுகள் வளர்ச்சித் திட்டம், உலக சுகாதார நிறுவனம், இந்திய அரசு ஆகியோருக்கிடையே ஏற்பட்ட முத்தரப்பு ஒப்பந்தத்தின்படி, சென்னைப் பெருநகர்ப் பகுதி முழுவதிலும் குடிநீர் வழங்கு-கழிவு நீரகற்றுத் திட்டத்திற்கு முதலீடு செய்வதற்கு முன்னர் ஆய்வுகளை மேற்கொள்ள தமிழ்நாடு அரசு அனுமதித்தது.

நிறுவன அமைப்பு நிர்வாகம், நிதி விவகாரங்கள் குறித்து ஆலோசனை வழங்கவும், சென்னைப் பெருநகர்ப் பகுதிக்கான குடிநீர் வழங்கள் கழிவு நீர் அகற்றுவது குறித்த பெருந்திட்டமொன்றைத் தயாரிக்கவும் உலக சுகாதார நிறுவனம் சில தொழில் நுட்ப ஆலோசகர்களை நியமித்தது. ஆலோசகர்கள் ஒப்பந்தத்தின்படி இடைக்கால அறிக்கையுடன் பெருந் திட்டமொன்றையும் ஆலோ சகர்கள் அனுப்பினர். இடைக்கால அறிக்கை குறித்து அரசு பரிசீலனை செய்தது. உலக சுகாதார நிறுவனம் பரிவுரை

* 14—6—1978 ஆம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.